**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No.1869/2024**

**Prosecution Witness : 15**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பிரான்சிஸ் ஜான் கென்னடி | **Caste** | : |
| **Father's Name** | : தேவ சகாயம் | **Calling** | : சிறப்பு சார்பு ஆய்வாளர்- சாணார்பட்டி காவல் நிலையம் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 50 |
| | | **Dated** | : 20.05.2025 |

**20.05.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 22 திரு.**பிரான்சிஸ் ஜான் கென்னடி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 15 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>**எதிரி ஆஜர்**</u>

1. நான் தற்போது திண்டுக்கல் சாணார்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வந்தேன். கடந்த 24.01.2023–ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கணேசன் என்பவர் மனைவி ரமனி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகாரைப் பெற்று நிலையம் வந்து 12.00 மணிக்கு நிலைய குற்ற எண்.54/2023 பிரிவுகள். 279, 337 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம்

JM No.I நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தான். **(முதல் தகவல் அறிக்கை அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் காலம் 15ல் 24.01.2023 என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றத்தில் பெறப்பட்ட தேதி 28.01.2023 என உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு ஏன் காலதாமதமாக அனுப்பினேன் என்றால் CCTNSல் அடித்து வருவதற்கு தாமதமாகி விட்டது. நான் சொன்னவாறு சொன்ன தேதி சொன்ன நேரத்தில் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**STC.No.1869/2024**

**Prosecution Witness : 16**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மலைச்சாமி | **Caste** | : |
| **Father's Name** | : ஜெயசீலன் | **Calling** | : சார்பு ஆய்வாளர்-மதுவிலக்கு அமலாக்க துறை |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 45 |
| | | **Dated** | : 20.05.2025 |

**20.05.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–23 திரு.**மலைச்சாமி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.16 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்**

1. நான் திண்டுக்கல் மதுவிலக்கு அமலாக்க துறையில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் 24.01.2023–ம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் பிரான்சிஸ் ஜான் கென்னடி அவர்கள் குற்ற எண்.54/2023 பிரிவுகள் 279, 337 என்ற பதிவு செய்த எனது பார்வைக்கு வைத்திருந்த வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளாள பாண்டித்துறை மற்றும் கருப்பையா அவர்களின் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பின் பார்வை மகசர் தயார் செய்தேன். பின் சம்பவ இட மற்றும் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தவர்களான ரமணி,

குப்புச்சாமி, பிச்சையம்மாள், பாஸ்கர், கணேசன், வில்லியார், கார்த்திக், பழனியம்மான், பிச்சையம்மாள், கோபால் , வெங்கடேஷ், சிவலிங்கம், சின்னா, சேகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் 25.01.2023ம் தேதி நிலையத்தில் ஆஜரான விஜயக்குமார் த.பெ.பாலுச்சாமி என்பவரை காரணம் கூறி கைது செய்த தக்க ஜாமினில் விடுவித்தேன், பின் அன்றைய தினமே அவர் ஓட்டிவந்த TN–57–N–2254 என்ற வாகனத்தினை வட்டார மோட்டார் வாகன தணிக்கைக்கு அனுப்பி வைத்தேன். பின் 10.03.2023ம் தேதி காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தெய்வா, நஜியா, சரவணக்குமார் ஆகியோர்களை விசாரித்து, வழக்கில் காயம்பட்ட ரமனி, பாஸ்கர் அவர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கிய மருத்துவர்களை விசாரித்து இவ்வழக்கை பிரிவுகள் 279, 337 லிருந்து 279, 337, 338 இதச ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். பின் அன்றைய தினமே எனது விசாரணை முடித்து எதிரி மீது 279, 337, 338 இதச படி குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன். **(வரைபடம் அதாசஆ.4, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அதசாஆ.5, சின்னா என்பவரது காயச்சான்று அதசாஆ.6, கார்த்தி என்பவரது காயச்சான்று அதசாஆ.7, வில்லியார் என்பவரது காயச்சான்று அதசாஆ.8, பாஸ்கர் என்பவரது காயச்சான்று அதசாஆ.9, பிச்சையம்மாள் என்பவரது காயச்சான்று அதசாஆ.10, கருப்பசாமி என்பவரது காயச்சான்று அதசாஆ.11, பேச்சியம்மாள் என்பவரது காயச்சான்று அதசாஆ.12, கோபால் என்பவரது காயச்சான்று அதசாஆ.13, பழனியம்மாள் என்பவரது காயச்சான்று அதசாஆ.14, கணேசன் என்பவரது காயச்சான்று அதசாஆ.15, ரமணி என்பவரது காயச்சான்று அதசாஆ.16, சேகர் என்பவரது காயச்சான்று அதசாஆ.17, சிவலிங்கம் என்பவரது காயச்சான்று அதசாஆ.18, வெங்கடேஷ் என்பவரது காயச்சான்று அதசாஆ.19, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அதசாஆ.20 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பபட்ட தேதி 10.03.2023 என்றால் சரிதான். நீதிமன்றத்தில் பெறப்பட்ட தேதி 08.11.2024 என்றால் சரிதான். நான் சொன்ன தேதி மற்றும் சொன்னவாறு முதல் தகவல் அறிக்கை பெறப்படவில்லை என்றாலும் நான் சொன்னவாறு விசாரணை ஏதும் மேற்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றாலும் சொன்னவாறு கையொப்பம் பெறவில்லை

என்றாலும் சரியல்ல. நான் பார்வை மகசரை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் அவரது வாகனத்தை பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் மருத்துவரை விசாரணை செய்யவில்லை என்றாலும் தாக்கல் செய்த மருத்துவ சான்றிதழ்களை பின்னிட்டு தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ

Judicial Magistrate No.I
Dindigul.